IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

EP.No.55/2024

dated : 26.11.2025

R.W.1

Name அரிஹரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரர் நிறுவனத்தில் வாகன கடன் பெற்றிருந்தேன். 31.03.2018 ம் தேதி கடன் மற்றும் கொதுவை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடன் பெற்றேன். அந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்தேன். அந்த கடன் ஒப்பந்தத்தில் நான் கையொப்பம் செய்தேன். எனக்கு உத்திரவாதம் அளிப்பவராக திருமலைக்குமார் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். அந்த கடன் ஒப்பந்தத்தில் அனைத்து ஷரத்துக்களையும் ஏற்றுக் கொண்டுதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் இசைவு நடுவரை நியமிக்கும் அதிகாரத்தை மனுதாரர் நிறுவனத்திற்கு உள்ளது என ஒப்புக் கொண்டு நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தில் அந்த ஷரத்து உள்ளதா என்றே எனக்கு தெரியாது. திருநெல்வேலி இசைவு நடுவரிடம் நான் ஆட்சேபனை ஏதும் தெரிவித்தேனா என்றால் எனக்கு அதுபோன்ற அறிவிப்பு எதுவும் வரவில்லை. இசைவு நடுவரிடமிருந்து எனக்கு முறையான அறிவிப்பு வரப்பெற்றது என்றும் அதனை நான்

பெற்றுக்கொண்டபின்னரும் இசைவு நடுவர் முன்பு ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. நான் இசைவு நடுவரின் உத்தரவை எதிர்த்து சீராய்வு அல்லது மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். மாதந்தோறும் ரூ.16,000/- முதல் ரூ.17,000/- வரை வருமானமாக கிடைக்கும். நான் குடியிருக்கும் வீடு வாடகை வீடாகும். அதற்கு மாதம் ரூ.3000/- வாடகை செலுத்தி வருகிறேன். எனக்கு சொந்தமாக வாகனங்கள் ஏதும் இல்லை. இதற்கு முன்பு மனுதாரர் நிறுவனம் சமரச தீர்வுக்காக அழைத்தபோது மனுதாரர் நிறுவனத்திற்கு சென்று சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன் என்றால் சரிதான். மனுதாரர் நிறுவனமும் எவ்வளவு தொகையை குறைவாக செலுத்தலாம் என்று தெரிவிக்கவில்லை நானும் கேட்கவில்லை. நான் இசைவு நடுவரின் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பின்னரும் ஆஜராகாமல் விசாரணையை புறகணித்துவிட்டு அந்த உத்தரவு விவரம் தெரிந்தபின்னரும் அந்த உத்தரவை எதிர்த்து உரிய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யாமல் இந்நிறைவேறுதல் நீதிமன்றத்தில் நடுவரின் உத்தரவு என்னை கட்டுப்படுத்தாது என்று கூறுவது பொருத்தமற்றது என்று கூறுவது சரியல்ல. எனது ஆட்சேபனை இந்நீதிமன்றத்தால் பரிசீலிக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது எதிர்வாதம் நிராகரிக்கத்தக்கது என்றும் என்னை சிவில் சிறையில் அடைத்தால் பணம் வசூலாக வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.26 18:25:38 +0530